*2017 ஜூன் 29*] [*திரு. இரா. துரைக்கண்ணு*]

*பின்பற்ற இயலாது. மேலும், இந்தியாவிலுள்ள 61 வேளாண் பல்கலைக்கழகங்களிலும் இம்முறை செயல்பாட்டில் இருப்பதாகத் தெரியவில்லை. எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளைக் கருத்திற்கொண்டு, இனிவரும் ஆண்டுகளில் தர வரிசை நகர்வு முறை, அதாவது* sliding system *முறையினை நடைமுறைப்படுத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, அதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்து, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

## 5. கவன ஈர்ப்பு

### திருவையாறு, தமிழ்நாடு இசைக் கல்லூரியில் மாணவர் விடுதி அமைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுக் குறித்து கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள். (குறுக்கீடு) நாளை எடுத்துக்கொள்கிறேன்.*

**திரு. துரை. சந்திரசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவையாறு, தமிழ்நாடு இசைக் கல்லூரியில் மாணவர் விடுதி அமைக்க வேண்டியதன் அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்துள்ள கவன ஈர்ப்பு அறிவிப்பு தொடர்பாக, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**அறிக்கை**

கலை, பண்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு ஆகிய இடங்களில் தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. மேற்படி கல்லூரிகளில், சென்னை அரசு இசைக் கல்லூரியில், மாணவிகளுக்காக மட்டுமே விடுதி இயங்கி வருகின்றது. திருவையாறு, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் மாணவிகளுக்கான விடுதி பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்மூலம் நடத்தப்பட்டு வருகிறது. திருவையாறு அரசு இசைக் கல்லூரியில், 2014–2015 ஆம் கல்வியாண்டில், 140 மாணவர்களும், 2015–2016 ஆம் கல்வியாண்டில் 133 மாணவர்களும் மற்றும் 2016–2017 ஆம் கல்வியாண்டில் 79 மாணவர்களும் கடந்த மூன்றாண்டுகளில் பயின்றுள்ளனர்.

எனவே, தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு அரசு தமிழ்நாடு இசைக் கல்லூரிக்கு அருகில் வேறு இசைக் கல்லூரிகள் இல்லாததாலும், மாணவர்கள் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்து இக்கல்லூரியில் இசைக் கல்வி பயின்று வருவதாலும், பெரும்பாலான மாணவர்கள் கிராமப் பகுதியைச் சார்ந்தவர்கள் என்பதாலும், நடப்புக் கல்வியாண்டில் கல்லூரியில் சேர்ந்து பயிலும் மாணவர்களில், விடுதியில் தங்கிப் பயில விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அவர்களது விருப்பத்தினை அறிந்து, அதனடிப்படையில், இசைக் கல்லூரி வளாகத்தில் மாணவர்களுக்கான விடுதி பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்மூலம் ஏற்படுத்திட பரிசீலிக்கப்படும்.

பிற்பகல் 12–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.

**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதற்கு முன்பாக அந்தக் கல்லூரியினுடைய வரலாற்றை நான் இந்த மன்றத்திலே எடுத்துவைக்கவிரும்புகிறேன். மிகச்சிறந்த கல்லூரிகளில் ஒன்றான திருவையாறு அரசர் கல்லூரி, பழமைவாய்ந்த கல்லூரி. அந்தக் கல்லூரியில் 1965 ஆம் ஆண்டில், அன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த திரு. வேதநாயகம் அவர்கள், அரசர் இசைக் கல்லூரி என்ற கல்லூரியைத் தொடங்கினார்கள். அதைத்

தொடர்ந்து, 1973 ஆம் ஆண்டில், ஒரே வளாகத்தில் 2 கல்லூரிகள் இயங்கமுடியாத நிலையால், அரசர் இசைக் கல்லூரி, இசைத் துறையாக மாற்றப்பட்டது.

பல மாவட்டங்களில் இருந்து வாய்ப்பாட்டு, வீணை, வயலின், மிருதங்கம், நாதஸ்வரம், தவில், பரதநாட்டியம் போன்ற கலைகளைக் கற்றுக்கொள்வதற்கு வருகிறார்கள். சங்கீத கர்நாடக இசையின் மும்மூர்த்திகளில் ஒருவரான சத்குரு தியாகராஜர் வாழ்ந்த பூமி. அவர் மறைந்த இடத்திற்கு அருகில் காவிரி ஆற்றுக் கரையில் சரபோஜி மன்னர் காலத்தில் கட்டப்பட்ட அந்த எழில் மிகுந்த கட்டடத்தில் அந்தக் கல்லூரி இயங்கிவருகிறது. பல மாணவர்கள், பல மாவட்டங்களிலிருந்து வந்து சேர முடியாத நிலையை உணர்ந்து, மாண்புமிகு தமிழக முதல்வராக இருந்த எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள், 1996–2001 ஆட்சிக் காலத்தில், 1997–ல், மீண்டும் இசைத் துறையாகச் செயல்பட்டு வந்ததைத் தனியாக, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி என்று இசைக் கல்லூரியை முதன்முதலாகத் தொடங்கினார்கள்.

தொடக்கத்தில் பல மாவட்டங்களிலிருந்து ஏழையெளிய மாணவர்கள் அதில் பயின்றார்கள். மாணவியர்களுக்கு 2008–ல் விடுதி அமைக்கப்பட்டது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விவர அறிக்கையில் 2014–2015–ல் 140 மாணவர்களும், 2015–2016–ல் 133 மாணவர்களும் பயின்று வந்த நிலையில், 2016–2017–ல் 79 மாணவர்கள் பயின்றுள்ளனர் என்பது தெரிகிறது. அதாவது, மாணவர்களின் எண்ணிக்கை சரி பாதியாகக் குறைந்திருக்கிறது. அதற்கு ஒரே காரணம் என்னவென்றால், சிறந்த முறையில் இயங்குகின்ற அந்த இசைக் கல்லூரியில், விடுதி இல்லாத காரணத்தால்தான், மாணவர்கள் சேர்க்கை குறைந்திருக்கிறது. ஆனால், இந்த ஆண்டு எனக்கு கிடைத்த தகவலின்படி, 2017–2018–ல் 153 மாணவ, மாணவியர்கள் சேர்ந்திருக்கிறார்கள்; அதிலே 77 பேர் மாணவர்கள். எனவே, அவசியத்தைக் கருதி, இசைக்கு ஏற்ற இடமாக இருக்கின்ற திருவையாறில், அந்தக் கல்லூரிக்கு விடுதி அமைத்துத் தருவார்களா என்று தங்கள்மூலம் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில்தான் கலைகளையும், பண்பாட்டையும் பாதுகாத்திட வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்திற்காக, கலை, பண்பாட்டுத் துறை என்ற ஒரு தனித் துறை டிசம்பர் திங்கள் 1991 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. கலை, பண்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு ஆகிய இடங்களில் தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. மேற்படி கல்லூரிகளில் சென்னை அரசு இசைக் கல்லூரியில் மாணவியர்களுக்காக மட்டுமே விடுதி இயங்கிவருகிறது. திருவையாறு தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் மாணவியர்களுக்கான விடுதி பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைமூலம் நடத்தப்பட்டு வருகிறது. திருவையாறு அரசு இசைக் கல்லூரியில் 2014–2015 ஆம் கல்வியாண்டில் 140 மாணவர்களும், 2015–2016 ஆம் கல்வியாண்டில் 133 மாணவர்களும், 2016–2017 ஆம் கல்வியாண்டில் 79 மாணவர்களும் என கடந்த 3 ஆண்டுகளில் பயின்றுள்ளனர். எனவே, தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு அரசு இசைக் கல்லூரிக்கு அருகில் வேறு இசைக் கல்லூரிகள் இல்லாததாலும், மாணவர்கள் பல்வேறு மாவட்டங்களில் இருந்து இக்கல்லூரியில் இசைக் கல்வி பயின்று வருவதாலும், பெரும்பாலான மாணவர்கள் அருகில் உள்ள கிராமப் பகுதிகளைச் சார்ந்தவர்கள் என்பதாலும், நடப்புக் கல்வியாண்டில் கல்லூரியில் சேர்ந்து பயிலும் மாணவர்களில் விடுதியில் தங்கிப் பயில விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அவர்களது விருப்பத்தை அறிந்து, அதன் அடிப்படையில் இசைக் கல்லூரி வளாகத்தில் மாணவர்களுக்கான விடுதி பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைமூலம் ஏற்படுத்திட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், நீங்கள் ஏற்கெனவே விவர அறிக்கை அவையில் வைத்திருக்கிறீர்கள். உறுப்பினர் இப்போது கேள்வி கேட்டிருக்கிறார். அதற்கு மட்டும் பதில் சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடு)

2017 ஜூன் 29]

பிற்பகல் 12–15

**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 153 பேர் சேர்ந்திருக்கின்றனர்; அதில் 77 மாணவர்கள் சேர்ந்திருக்கின்றனர். அந்த மாணவர்களுக்கு விடுதி அமைத்துத் தரப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். அதைப்போல, இப்போது அரசர் கல்லூரியில் அந்த மாணவர்களுக்கு விடுதியில் இடமளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மிக மோசமான உணவு வழங்கப்படுகிறது. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, நீங்கள் செல்கின்ற பகுதிகளில் ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும். முன்பெல்லாம் அமைச்சர்கள் ஆய்வு செய்வார்கள். ஊழியர்களுக்கு பயம் இருக்கும். இப்போது எல்லா விடுதிகளிலும் மிக மோசமான உணவு வழங்கப்படுகிறது. அதேபோலத்தான், திருவையாறு அரசர் கல்லூரியிலும், இப்போது மாணவர்களுக்கு மிகத் தரம் குறைந்த உணவு வழங்கப்படுகிறது. அதையும் அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, சிறந்த முறையில் உணவை வழங்க ஆவன செய்ய வேண்டும். அதைப்போல, இந்த கல்வியாண்டில் மாணவர்கள் விடுதி வழங்கப்படுமா என்பதையும் கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** மாண்புமிகு அம்மா அவர்களின் அரசில் செயல்படுகின்ற அந்தக் கல்லூரி சிறந்த கல்லூரி என்று உறுப்பினர் அவர்கள் ஒப்புக்கொண்டதற்கு அம்மாவின் அரசின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் இந்தக் கருத்தை வலியுறுத்தி, கல்லூரியை ஆய்வு செய்து, மாணவர்களின் விருப்பத்தின் அடிப்படையில், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசினால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.